# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

**O.S.56/2023**

**CNR.No.TNCB19000**

Date: 23.06.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சரவணன் | **வயது** | 56 |
| **த/பெ** | சென்னியப்பன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | காரமடை | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 23th June 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி தங்கவேல் என்ன பரிகாரம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கட்டிட வேலை செய்யும்போது கீழே விழுந்து விட்டதால் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் பதிவு செய்யப்பட்ட கட்டிட பொறியாளர் என்றால் சரிதான். நான் பதிவு செய்யப்பட்ட கட்டிட பொறியாளர் என்பதால் கட்டிட உரிமையாளரிடம் ஒப்பந்தம் போட்டுக் கொண்டுதான் பணி மேற்கொள்வேன் என்றால் ஒப்பந்தமும் போட்டுக் கொள்வோம் வாய் மொழியாகவும் பணி மேற்கொள்வேன், 2015 ம் ஆண்டில் தேக்கம்பட்டி நெல்லித்துறை ரோட்டில் பத்ரகாளியம்மன் கோவில் ரேணுகா தேவி திருமண மண்டபத்தில் கட்டிட பணி மேற்கொண்டேன் என்றால் சரிதான்.

அந்த கட்டிட பணி யாருடைய இடத்தில் மேற்கொண்டேன் என்றால் ரேணுகா தேவி இடத்தில் பணி மேற்கொண்டேன். அந்த இடத்தின் உரிமையாளர் பெயர் ரேணுகாதேவி என்றால் சரிதான். நான் பொய் சொல்கிறேன் என்றும் கட்டிடத்திலுள்ள திருமண மண்டபத்தின் பெயர்தான் ரேணுகாதேவி என்றும் கட்டிடத்தின் உரிமையாளர் பெயர் ரேணுகாதேவி இல்லை என்றால் சரியல்ல. நான்

கட்டிட உரிமையாளரிடம் ஒப்பந்தம் போட்டு பணி மேற்கொண்டேனா என்றால் இல்லை. கட்டிட உரிமையாளரிடம் வாய்மொழி ஒப்பந்தம் செய்துகொண்டுதான் பணி மேற்கொண்டேன். யாரிடம் ஒப்பந்தம் போட்டேன் என்றால் ரேணுகாதேவி என்பவரிடம்தான் ஒப்பந்தம் மேற்கொண்டேன். ரேணுகாதேவி மண்டபத்தின் உரிமையாளர் பெயர் ஆண்டாள் அம்மாள் என்றும் அவருடைய கணவர் பெயர் ராமதாஸ் என்றும் அவர்களுடைய மகன் பெயர் சௌந்தரராஜன் என்றால் ரேணுகாதேவி மண்டபத்தின் உரிமையாளர் பெயர் ஆண்டாள் அம்மாள் என்பது எனக்கு தெரியாது அவர்தான் ரேணுகாதேவி என்று நினைத்துக் கொண்டேன்.

நான் தற்போது ஆண்டாள் அம்மாளை ரேணுகாதேவி என்று நினைத்துக் கொண்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கானது எனக்கு எதிராகவும் ஈஸ்வரன் என்பவருக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஈஸ்வரன் என்பவர் எனக்கு கீழ் துணை கட்டிட ஒப்பந்ததாரர் என்றால் சரிதான். ஈஸ்வரன் என்பவர் துணை கட்டிட ஒப்பந்ததாரர் இல்லை என்றும் அவர் மேஸ்திரி என்றால் சரியல்ல. 26.03.2015 அன்று வாதிக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த விபத்தானது ரேணுகாதேவி திருமண மண்டபத்தில் நான் எடுத்த கட்டிட ஒப்பந்த பணியின்போது தான் ஏற்பட்டது என்றால் சரிதான். ஆனால் வாதி துணை ஒப்பந்ததாரர் ஈஸ்வரனிடம் வேலை செய்தார்.

ஈஸ்வரன் துணை ஒப்பந்ததாரர் என பொய் சொல்கிறேன் என்றும் ஈஸ்வரன் என்பவர் கட்டிட மேஸ்திரி என்றால் சரியல்ல. விபத்து தொடர்பாக மேட்டுப்பாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என் மீதும் ஈஸ்வரன் மீதும் வழக்கு தாக்கல் செய்து C.C.No.497/2015 நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கானது இந்திய தண்டணை சட்டம் பிரிவுகள் 288 மற்றும் 338 பிரிவுகளின்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.